செய்தி வெளியீடு எண்:428 நாள் : 07.08.2013

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற் பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institute) அரசால் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 43 பொறியியல் மற்றும் 20 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வந்து செல்வதற்கு வசதியாக அவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு வருமான உச்ச வரம்பின்றி, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே சீரான உதவித் தொகையாக மாதந்தோறும் 500 ரூபாய் வழங்கவும், மாணாக்கர்களுக்கு 2 செட் சீருடை, 1 ஜோடி காலணி வழங்கவும், இத்தொழிற் பயிற்சி நிலையங்களை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

தற்பொழுது 62 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 28594 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைக்களுடன் செயல்பட்டு வருகின்றன. இத் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் கல்வி பயில அதிக அளவில் மாணவ, மாணவியர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். தொலை நோக்குத் திட்டம் 2023-ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பூர்த்தி செய்ய தொழில் திறன் பெற்றவர்களின் தேவை அதிகரித்து வருகிறது. எனவே தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் அவாவினை நிறைவு செய்யும் வகையிலும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் 5 தொழிற் பயிற்சி நிலையங்களை துவங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வேப்பலோடை, தேனி மாவட்டத்தில் போடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு, திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை ஆகிய 5 இடங்களில் 5 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை 26 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த தொழிற் பயிற்சி நிலையங்கள் 2013-14 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், வருங்காலத்தில் தொழில் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படும்.

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள்:– 7.8.2013.